**தலைப்பு 275 - பொலன்னறுவை மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2014 ஆம் ஆண்டு**

---

இவ்வறிக்கையின் 1 ஆம் பந்தி தொடக்கம் 2 ஆம் பந்தி வரை மாவட்டச் செயலகம் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்புக்குரிய கணக்காய்வு அவதானிப்புகள் காணப்படுகின்றன.

**1. மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்**

---

(அ) தமன்கடுவ
(ஆ) ஹிங்குரக்கொடை
(இ) மெதிரிகிரிய
(ஈ) லங்காபுர
(உ) திம்புலாகல
(ஊ) வெலிகந்தை
(எ) எலஹெர

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

பொலன்னறுவை மாவட்டச் செயலகத்தின் 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், கணக்கிணக்கக் கூற்றுக்கள் ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் என்பவற்றின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2015 ஆகஸ்ட் 21 திகதியன்று மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல்களது மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுத்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, மற்றும் கணக்கிணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்கப் பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியொகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

மாவட்டச் செயலகத்திற்காக வழங்கப்பட்ட மொத்த நிதியேற்பாடு ரூபா 453.26 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 442.58 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய ஏற்பாடுகளில் சேமிப்பு ரூபா 10.68 மில்லியன் அதாவது 2.36 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

**2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| செலவினம் | நிகர நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருவன | 367.36 | 357.47 | 9.89 | 2.69 |
| மூலதனம் | 85.90 | 85.11 | 0.79 | 0.92 |
| மொத்தம் | 453.26 | 442.58 | 10.68 | 2.36 |

(ஆ) ஏனைய அமைச்சுக்காளலும் திணைக்களங்காளலும் வழங்கப்பட்ட நிதியேற்பாடு

பல்வேறு செயற்பாடுகளுக்காக 23 அமைச்சுக்கள் மற்றும் 17 திணைக்களங்களால் முறையே ரூபா 1,549.17 மில்லியன் மற்றும் ரூபா 601.71 மில்லியன் ஆக ரூபா 2,150.88 கூட்டுத்தொகை நிதிஏற்பாடு மாவட்ட செயலகத்திற்கு கிடைத்திருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் மாவட்ட வெயலகத்தினால் முறையே ரூபா 1,483.72 மில்லியன் மற்றும் ரூபா 578.68 மில்லியன் ஆக ரூபா 2,062.32 மில்லியன் கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முறையே ரூபா 65.41 மில்லியன் மற்றுமு் ரூபா 23.11 மில்லியன் ஆக ரூபா 88.52 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்தின் விடய இலக்கம் 27201 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளவாறான எல்லைகளும் கீழே காணப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| | அதிகூடிய எல்லை | உள்ளவாறானது | அதிகுறைந்த எல்லை | உள்ளவாறானது | அதிகூடிய எல்லை | உள்ளவாறானது |
| | ரூபா(மில்) | ரூபா(மில்) | ரூபா(மில்) | ரூபா(மில்) | ரூபா(மில்) | ரூபா(மில்) |
| 27501 | 27.00 | 19.40 | 15.00 | 15.83 | 106.00 | 79.80 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

மாவட்டச் செயலகத்தின் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்கு மீதி ரூபா 252,185,292 ஆக இருந்தது.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம் பொலன்னறுவை செயலகத்தின் ஒதுக்கீட்டக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டள்ளது.

## 3. தலைப்பு 275 - பொலன்னறுவை மாவட்ட செயலகம்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

பொலன்னறுவை மாவட்ட செயலகத்தினாலும் 7 பிரதேச செயலகங்களினாலும் கீழே காண்பிக்கப்படும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 565(1) இன் படி மாவட்ட செயலகத்தின் பொது வைப்புப் பேரேடு நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை.

| | செயலகம் | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
| --- | --- | --- | --- |
| (i) | வெலிகந்தை, திம்புலாகல லங்காபுர, ஹிங்குரக் கொடை, எலஹெர மற்றும் மொதிலிகிரிவ பிரதேச செயலகங்கள் | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

| | | | |
|---|---|---|---|
| (ii) | லங்காபுர, ஹிங்குரக்கொடை, எலஹெர மற்றும் மெதிரிகிரிய பிரதேச செயலகங்கள் | கனணி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப்பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IVI/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை |
| (iii) | தமன்கடுவ, லங்காபுர மற்றும் எலஹர பிரதேச செயலகங்கள் | கணக்காய்வு ஐயவினாப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 452(1) |
| (iv) | மெதிரிகில்ல பிரதேச செயலகம் | கிடைக்கின்ற காசோலைகள், காவுக்கட்டளைக்கான பதிவேடு | நிதிப்பிரமாணம் 451 |
| (v) | வெலிகந்தை, திம்புலங்கல, எலஹெர, ஹிங்குரக்கொடை, மெதிரிகிரிய லங்காபுர மற்றும் தமன்கடுவ பிரதேச செயலகங்கள் | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (vi) | சகல பிரதேச செயலகங்கள் | தொலைபேசி அழைப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 850(1) இன் பிரகாரம் 29 ஆவது அத்தயாயம் |
| (vii) | தமன்கடுவ, திம்புனல்லை, லங்காபுர, ஹிங்குருக்கொடை, எலஹெர, மெதிரிகிரிய மற்றும் வெலிகந்தை பிரதேச செயலகம் | இழப்புத் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (viii) | தமன்கருவ, வெலிகந்தை, லங்காபுர, ஹிங்குரக் கொடை, எலஹெர மற்றும் மைதிரிகிரிய பிரதேச செயலகங்கள் | இழப்புத் தொடப்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (ix) | மதவட்ட … சகல பிரதேச செயலகங்களும் | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (x) | சகல பிரதேச செயலகங்களும் | வாகனப் பட்டியல்படுத்தப்பட்ட பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) |

| | | | |
|---|---|---|---|
| (xi) | தமன்கடுவ, திம்புலாகல, லங்காபுர, ஹிங்குரக்கொடை, எலஹெர மற்றும் மெதிரிகிரிய பிரதேச செயலகங்கள் | கொள்வனவு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.1 ஆம் வழிகாட்டி |
| (xii) | லங்காபுர, ஹிங்குரக் கொடை, எலஹெர, மெதிரிகிரிய, தமன்கடுவ மற்றும் திம்புலாகல பிரதேச செயலகங்கள் | கேள்வி கோரல் பதிவேடு | 5.2.1 ஆம் வழிகாட்டி |

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவின விடயமொன்றிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 30,000 தொகையான மொத்த தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 10 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு செய்யப்பட்டமையின் காரணமாக நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அற்ற செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 09 சதவீதம் முதல் 74 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**3.3 பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் படி 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாவட்டச் செயலகத்திற்குரிய பொது வைப்புக் கணக்கு மீதி ரூபா 157,903,222 ஆக இருந்தது. அத் திகதியில் தனிப்பட்ட மீதி அறிக்கைகளின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 157,948,171 ஆகக் காணப்பட்டது. அதன்படி ரூபா 44,949 வேறுபாடாகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற மாவட்ட செயலகத்தின் ரூபா

57,440,444 தொகை மற்றும் 04 பிரதேச செயலகங்களின் ரூபா 402,155 கூட்டுத் தொகையான வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மாவட்ட செயலகத்தில் காலாவதியான வைப்புக்களிலிருந்து ரூபா 57,246,042 தொகையான வைப்புக்கள் அரசாங்க கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வைப்பாக இருந்தது.

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

---

27501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆந் திகதயில் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் படி அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,210,130 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 14 வருடங்கள் வரையிலான காலம் முதல் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு மாவட்டச் செயலகம் தவறியிருந்தது.

(ஆ) தாபன விதிக்கோவையின் ஓஓஐஏ ஆம் அத்தியாயத்தின் 4.2.5 உப பிரிவின் படி மரணமடைந்த உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 254,645 தொகையான கடன் மீதி 10 வருடங்களுக்கு மேற்பட்டகாலம் முழுவதும் தீர்க்கப்படாமல் மீதியாகக் காணப்பட்டது.

(இ) 1 வருடம் முதல் 8 வருடங்கள் வரையிலான காலம் முழுவதும் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 290,405 தொகையான 05 கடன் மீதிகள் மீளாய்வாண்டின்போது தீர்க்கப்பட்டிருந்த போதிலும் அந்த மீதிகளுக்குரிய நிலுவையாகக் காணப்பட்ட காலத்தில் அந்தக் கடன் மீதிக்குரிய வட்டி அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்தக்கள் முகாமைத்துவம்**

---

மாவட்டச் செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதகையின் போது பின்வரும் பற்றாக்குறைகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டதன் படி சிர சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன.

| | சொத்தக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் | |
|---|---|---|---|---|
| | | | 01 வருடத்திற்கு மேல் 3 இற்கு குறைவு | 3 வருடங்களுக்கு மேல் |
| | | | அலகு | அலகு |
| (i) | கட்டிடங்கள் | 02 | - | 02 |
| (ii) | மோட்டார் வாகனங்கள் | 10 | 01 | 09 |
| (iii) | இயந்திரப் பொறிகள் | 23 | 22 | 01 |
| (iv) | ஏனைய சொத்துக்கள் - துவிச்சக்கர வண்டி (பெண்களின்) | 01 | - | 01 |
| (v) | பொருளாதார அபிவிருத்தி உத்தியோகபூர்வ பெயர்ப்பலகை | 35 | 35 | - |
| (vi) | White Board | 25 | 25 | - |

(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02.⁚.2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றறிக்கையின் படி 2014 இன் வருடாந்த பொருள்மெய்மையாய்வு மேற்கொண்டு 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மாவட்ட செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களினால் 02 நாட்கள் முதல் 120 நாட்கள் வரையிலான காலம் தாமதித்து கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(இ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தமன்கடுவ பிரதேச செயலகத்தினால் ரூபா 2 மில்லியன் பெறுமதியான 0.1548 ஹெக்டேயர் காணியும் கட்டிடமும் வருடமொன்றிற்கு மேற்பட்ட காலம் முதல் தொழில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) ஹிங்குரக்கொடை பிரதேச செயலனத்தினால் மீளக் கையளிக்கும் அடிப்படையில் வழங்கப்பட்ட 1000 லீற்றர் கொள்ளளவுடைய 110 நீர்த் தாங்கிகள் பல்வேறு அமைப்புக்களுக்கும் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டு பல வருடகாலம் கடந்திருந்த போதிலும் அந்த நீர்த் தாங்கிகளை மீளப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது அது தொடர்பில் பின் தொடர் நடவடிக்கைகளைச் செய்வதற்கோ பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | சட்டங்கள, விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| (அ) | மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் 203 ஆவது அதிகாரத்தின் செப்தெம்பர் 18 அந் திகதிய பீஎப்/437 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றறிக்கை | - | எலஹெர பிரதேச செயலகத்தினால் பயன்படுத்தப்படுகின்ற வாகனமொன்றிற்காக வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிச் சான்றிதழ் என்பன பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனசாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை<br>-------------------------------------------------------- | | |
| | XII ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவு | - | விடுமுறை விண்ணப்படிவம் விடுமுறை ஆரம்பிக்கும் திகதிக்கு ஏழு நாட்களுக்கு முன் விடுமுறை அங்கீகரிக்கின்ற, உத்தியோகத்தரின் அலுவலகத்திற்குக் கிடைக்க வேண்டியிருந்த போதிலும் பொது 25 படிவத்தின் மூலம் விடுமுறை கோரப்பட்ட அல்லது கோரப்படாத தமன்கடுவ பிரதேச செயலகத்தின் 17 உத்தியோகத்தர்களினால் 187 நாட்கள் விடுமுறையில் பெறப்பட்டிருந்தது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்<br>------------------------------------------------------------- | | |
| | (i) நிதிப்பிரமாணம் 115 | 11,816 | பொலன்னறுவை மாவட்ட செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்காக நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 225(4) | - | திம்புலாகல பிரதேச செயலகத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்ட உறுதிச்சிட்டுக்களின் அதனைத் தயாரித்து சரியான தன்மையைப் பரீட்சித்த உத்தியோகத்தர்களினால் உறுதிச்சீட்டுக்களில் உரிய இடத்தில் கையொப்பமிடப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| | (iii) நிதிப்பிரமாணம் 237(அ)(iii) | 2,213,442 | பொலன்னறுவை மாவட்ட செயலகத்தினால் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகள் மிகவும் நல்லநிலையில் இருக்கின்றமை, நியதிகளுக்கு நிபந்தனைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டமைக்கும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சான்றிதழொன்று பெறப்படாமல் நிறுத்தி வைத்தல் பணம் விடுவிக்கப்பட்டிருந்தது. |
| | (iv) | நிதிப் பிரமாணம் 371 | 1,779,500 | திம்புலாகல பிரதேச செயலகத்தினால் 19 சந்தர்ப்பங்களின் போது பல்வேறு செயற்பாடுகளுக்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணம், அந்த உத்தியோகத்தர்களினால் 2 மாதங்கள் முதல் 7 மாதங்கள் வரையிலான காலதாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. |
| | (v) | நிதிப்பிரமாணம் 880(1) மற்றும் 881(1) | - | மெதிரிகிரிய பிரதேச செயலகத்தினால் பிணை வைப்பு பெறவேண்டியஉ த்தியொகத்தர்களிடமிருந்து பிணைப் பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (vi) | நிதிப் பிரமாணம் 702(3) | - | மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட எந்த செயற்திட்டத்தினதும் உடன்படிக்கைகளின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை<br>---------------------------------------------------------- | | | |
| | (i) | 2.14.1 ஆம் வழிகாட்டி | - | திம்புலாகல பிரதேச செயலகத்தினால் 5 கொள்வனவுகளுக்காக கேள்வி கோரப்பட்டிருந்த அந்த ஒவ்வொரு கொள்வனவுகளுக்கும் ஒரு கேள்வி மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் |

| | | | |
|---|---|---|---|
| | | | அதன் அடிப்படையில் கொள்வனவுகளைக் கையளிக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. விலை இணக்க முறைமையின் கீழ் கேள்விதாரருக்கு கொள்வனவு விண்ணப்பம் பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) | 5.4.4 ஆம் வழிகாட்டி | 3,500,00 | பொலன்னறுவை மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுக்காக முற்பணம் செலுத்தும் போது முற்பணக் கொடுப்பனவுகள் காப்பு பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 6.3.3 (ஆ) ஆம் வழிகாட்டி | - | எலஹெர பிரதேச செயலகத்தினால் கேள்வி முடிவடைந்ததுடன் கூடிய விரைவில் கேள்விதாரரின் அல்லது அவர்களின் முகவர்கள் முன்னால் கேள்வி திறக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கேள்விதாரர்களுக்கு கேள்வி திறக்கும் சந்தர்ப்பத்தை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.7 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல் செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல் மற்றும் செயற்திட்டங்களின் தாமதம் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்

தமன்கடுவ பிரதேச செயலகத்தினால் மாகாண எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கல்லேல்ல சமட் அவர்களின் விட்டிற்கு அருகில் குறுக்கு வீதிக்கு சிறிய பாலமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 100,000 இற்கு மதிப்பிடு

செய்யப்பட்ட செயற்திட்டம் காணப்பட்ட மோசமான காலநிலையின் காரணமாக 2014 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாது கைவிடல்

---

மாவட்ட செயலகத்தினால் வனசீவசாசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ‘‘தீப உயன’’அபிவிருத்தி செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தவதற்காக ரூபா 30,800.535 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்திற்காக தொல்பொருள் ஆணையாளரின் அங்கீகாரம் கிடைக்காமையினால் அந்த செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. அரசாங்கத்தினால் அந்த செயற்திட்டத்திற்காக ரூபா 1,350,418 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) நிதி விடுவிக்கப்பட்டிருந்தும் செயல்முன்னேற்றத்தைப் பெறாதிருந்த செயற்திட்டங்கள்

---

நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் பின்வரும் செயற்திட்டங்களில் செயல்முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) வெலிகந்தை பிரதேுச செயலகப் பிரிவினால் 2014 இன் பண்முகப்படுத்துதப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கிழ் கடவத்மடுவ பங்சசீலி முதியோர் சனசமூக மண்டபத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 50,000 செலுத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும் உரிய சனசமூக மண்டபத்தை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட காணி மீளாய்வாண்டின் இறுதி வரையில் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) வெலிக்கந்தை பிரதேச செயலகத்தினால் 2014 ஆம் அண்டின் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பௌத்த நிலையமொன்றிற்காக ரூபா 210,000 பொருளுதவி வழங்கப்பட்டிருந்தது. அந்த உதவியிலிருந்து எந்த நிர்மாணங்களும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) லங்காபுற பிரதேச செயலகத்தினால் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு விஷேட செயற்திட்டத்தின் கீழ் அல்ஹபீபா அமைப்பதற்காக சனசமூக மண்டபமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 72,750 பெறுமதியான பொருளுதவி வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறான சனசமூக

மண்டபத்தை நிர்மாணிப்பதற்காக குறிப்பிடப்பட்ட காணி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

மாவட்ட செயலகத்தினாலும் பிரதேச செயலகத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டியின் செயல் நடைமுறைகளைப் பின்பற்றாமை

---

மாவட்ட செயலகத்தை உள்ளடக்கிய பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட சில கொள்வனவு நடவடிக்கைகள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கபடுகின்றன.

(i) எலஹெர மற்றும் பெறுமதியுடைய விடயத்தை கொள்வனவு குறைந்த பெறுமதியுடைய விடயத்தை கொள்வனவு செய்வதற்காக வழங்குனர்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த விடயத்திற்காக மாவட்ட செயலகத்தில் பதிவு செய்துள்ள வழங்குனர்களின் பதிவேடு அல்லது தொலைபேசி பெயர்ப்பட்டடோலை கூறுவிலை கோருவதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) ஹிங்குரக் கொடை பிரதேச செயலகத்தினால் தாய்சேய் சுகாதார நிலையத்திற்குத் தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உதவி பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 பெப்ரவரி 12 ஆந் திகதிய 13/0198/540/004 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு முரணாக பொலன்னறுவை மாவட்ட செயலகத்தினால் 2012/13 பெரும் போகத்தின் போது விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நெல் இருப்பை விற்பனை செய்யும் போது உள்நாட்டு வாணிப அமைச்சுச் செயலாளரின் பங்குபற்றலின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iv) 2013 யூலை 17 ஆந் திகதிய அமைச்சரவைக் குறிப்பின் 6.3 ஆம் பந்தியின் படி 2012.'.13 பெரும் போகத்திற்குரிய மாவட்ட செயலகத்திற்குச் சொந்தாமான நெல் இருப்பை விற்பனை செய்யும் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. பொலன்னறுவை மாவட்டத்தில் ஒரு தனியார் கம்பனியினால் 2013 யூலை 23 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு அனுப்பப்பட்ட பெக்ஸ் படிவத்தில் குறியிடப்பட்ட விலையினை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட செயலகத்திற்குரிய 7,941.149 கிலோ கிரயமான முழு நெல் இருப்பும் ரூபா 250,192,608 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன.

(ஆ) விதை நெல்லுக்கான பணக் கொடுப்பனவு

---------------------------------------------------------------------------

2014 ஆம் ஆண்டின் விதை நெல்லுக்காக கொடுப்பனவு செய்வதற்கு 243-110-2502-2 என்ற செலவின விடயத்தின் கீழ் நிதி ஏற்பாடு கிடைத்திருந்தது. அந்த நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டு காசோலை மூலம் உரிய தரப்பினருக்கு பணம் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு கொடுப்பனலு செய்யும்போது காசோலை விநியோக பதிவேட்டில் உரிய பெறுனர் இனங்காணப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையான அட்டை இலக்கம் மற்றும் காசோலை பெற்றுக் கொண்டமைக்கான கையொப்பமிடப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(இ) காசோலை விநியோகித்தல்

-----------------------------------------------------

மெதிரிகிரிய பிரதேச செயலகத்தில் காசோலை எழுதுதல் மற்றும் விநியோகித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற விடயப்பொறுப்பு எழுதுவினைரின் கையிர் இருந்த 56 காசோலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தத. இந்த 56 காசோலைகளும் வெற்றுக் காசோலைகளாக இருந்ததுடன் அவற்றை விநியோகிப்பதற்கு கணக்காளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனுள் மெதிரிகிரிய பிரதேச செயலகத்தின் காசோலை விநியோகித்தலின் செயல் நடைமுறையில் உள்ளகக் கட்டுப்பாடு நலிவற்ற நிலையில் காணப்பட்டது.

**3.9 நட்டமும் இழப்பும்**

-----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) லங்காபுற பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2014 யூன் 26 ஆந் திகதி விபத்திற்குட்பட்டமையினால் ரூபா 187,750 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. அந்த விபத்து தொடர்பாக காப்புறுதி நிறுவனத்திடமிருந்து ரூபா 115,621 தொகை கிடைத்திருந்தது. எஞ்சிய ரூபா 72,123 தொகையான நட்டத்தை உரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திம்புலாகல பிரதேுச செலயகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2010 யூலை 25 ஆந் திகதி விபத்திற்குள்ளாகியிருந்தது. அது தொடர்பாக பரீட்சித்து வழங்கப்பட்ட பரிசொதனை அறிக்கையின் படி விபத்திற்குப் பொறுப்புவாய்ந்த முன்னாள் பிரதேுச செயலாளரிடமிருந்து ரூபா 230,000 தொகைக்குரிய நட்டம் அறவிடவேண்டியிருந்தது. பிரதேச செயலகத்தினால் அந்த நட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அந்த வாகனம் பழுதுபார்க்கப்படாமல் 2015 யூலை மாதம் வரையில் 5 வருடகாலமாக திம்புலாகல பிரதேச செயலகத்தின் வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) மாவட்ட செயலகத்திற்கும் பிரதேச செயலகங்களுக்கும் உரிய 07 வாகனங்கள் விபத்திற்குள்ளாகி 01 வருடம் முதல் 04 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் 2015 யூன் 18 ஆந் திகதி வரையிலும் அந்த விபத்துக்குரிய பரிசொதனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திம்புலாகல பிரதேச செயலகத்தின் முன்னாள் பிரதேச செயலாளருக்கு கடமை நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட வுழளாடிைய வரையான மடிகணனி உத்தியோகபூர்வ இல்பத்தில் களவு போயிருந்தது. இது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் படி ஆரம்ப அறிக்கை மற்றும் பூரண அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை.

**3.10 முகாமைத்துவ நலிவுகள்**

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொலன்னறுவை மாவட்டத்தின் 05 பிரதேச செயலகங்களின் அதிகாரப் பிரதேசத்தில் அரசாங்க காணியில் வாழ்ந்துவருகின்ற பயிர்ச் செய்கை

நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்ற விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக சனாதிபதியினால் கையொப்பமிடப்பட்ட 1,266 கொடுப்பனவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. அந்த பிரதேச செயலகங்களின் காணிப் பிரிவுகளில் பல வருடகாலமாக அந்த கொடுப்பனவுப் பத்திரங்கள் விவசாயிகளுக்கு கையளிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஹிங்குரக்கொடை பிரதேச செயலகத்தின் விவசாயிகளுக்கு கையளிக்கப்படாதிருந்த 625 கொடுப்பனவுப் பத்திரங்களுக்கிடையே 120 கொடுப்பனவுப் பத்திரங்கள் காணிப்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(இ) மெதிரிகிரிய பிரதேச செயலகத்தின் கொடுப்பனவுப் பத்திரம் விநியோகிக்கும் பதிவேட்டில் கொடுப்பனவுப் பத்திரங்களை கையேற்ற தரப்பினரின் பெயர், கையொக்கம் மற்றும் திகதி …… இடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக கொடுப்பனவுப் பத்திரம் உள்ளபடியாக உரிய நபருக்கு கிடைத்ததா என்பது தொடர்பில் உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஈ) மெதிரிகிரிய பிரதேச செயலகத்தில் சேவையாற்றுகின்ற 8 உத்தியோகத்தர்களுக்கு விடுமுறைப் பதிவேட்டின் படி மீளாய்வாண்டின் போது விடுமுறை பெறப்பட்டிருக்கவில்லை. அந்த உத்தியோகத்தர்களுக்கிடையே அனேகமானோர் வெளிக்கள உத்தியோகத்தர்களாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. அதன்படி பிரதேச செயலகத்தில் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் விடுமுறை பெற்றுக் கொள்ள…. கட்டுப்பாடு நலிவான நிலையில் இருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(உ) லங்காபுர பிரதேச செயலகத்தில் 2014 ஆம் ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட நிதியேற்பாட்டின் கீழ் லங்காபுற சேவைத் தொகுதி கட்டிடத்தின் வேலையைப் பூர்த்தி செய்வதற்காக ரூபா 49,265 பெறுமதியான பொருளுதவி வழங்கப்பட்டிருந்தது. அந்த உதவிகளுக்குரிய செயற்பாடுகளில் பயன்படுத்தாது அலுவலக களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) தாபன விதிக் கோவையின் ஓஐஓ ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவின் படி சகல அரசாங்கத்தின் சகல வீடுகளும் தரப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், எலஹெர பிரதேச செயலகத்தினால் அவ்வாறு அரசாங்கத்தின் வீடுகள் தரப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த வீடுகளில் இரண்டு உத்தியோகத்தர்கள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வாழ்ந்து வருகின்ற போதிலும் வாடகைக் காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) திம்புலாகல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் 05 சமூர்த்தி வங்கிச் சங்ககங்களில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 4,861,227 தொகையான செயற்பாடற்ற 7835 வங்கிக் கணக்கு காணப்பட்டன.

(ஏ) பட்டியல்படுத்தப்படாத ஏனைய சகல அரசாங்கத்தின் வீடுகளும் 05 வருடங்களுக்கு வரையறுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த காலத்தை விஞ்சி பொலன்னறுவை மாவட்ட செயலகத்திற்குரிய அரசாங்கத்தின் வீடுகளில் 08 உத்தியோகத்தர்கள் வசித்து வருகின்றமை வெளிப்படுத்தப்பட்டது.

(ஐ) அளுத் வெவ திவுலபிட்டி வெள்ளநீர் கட்டுப்பாட்டு பாதுகாப்பு அணையை மீள் நிர்மாணம் செய்தல், நீர்ப்பாசன வேலை விடயங்களுக்குரிய செயற்திட்டமாக இருந்தது. நீர்ப்பாவனத் திணைக்களத்தின் பொறியியலாளர் அல்லது தொழில்நுட்ப உத்தியோகத்தரின் ஆலோசனை வழிகாட்டல்கள் மற்றும் மேற்பார்வைகளின்றி சிவில் தொழில்நுட்ப உத்தியோகத்தரொருவரினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மற்றும் மேற்பார்வையின் கீழ் வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்தது. இருந்த போதிலும் அந்த செயற்திட்டங்கள் உரிய நியமங்களுடன் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.11 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி**

2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு குருணாகலை மாவட்டச் செயலகம் மற்றும் 30 பிரதேச செயலகங்களது தகவல்களின் பிரகாரம் பதவியணியினரின் நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட மட்டம் | 29 | 21 | 08 |
| (ii) | மூன்றாம் நிலைமட்டம் | 39 | 14 | 25 |
| (iii) | இரண்டாந்தர மட்டம் | 618 | 510 | 108 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 94 | 89 | 05 |
| | மொத்தம் | 780 | 634 | 146 |